# போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்

## IV-வது பாகத்தின் ஸப்ளிமெண்ட்

## SUPPLEMENT TO PART IV OF THE FORT ST. GEORGE GAZETTE,

MARCH 28, 1922.

ந. 5.] மதராஸ்: செவ்வாய்க்கிழமை மாலை, 1922-ம் வருஷம் மார்ச்மீ 28உ. [விலை, 3 பை.


# சென்னைச் சட்டநிருபண சபையாரின் ஆக்ட்
# ACT OF THE LOCA LEGISLATURE OF MADRAS.

சென்னைச் சட்ட நிருபண சபையாரால் செய்யப்பட்ட ஆக்ட்.

---

இந்தியா கவர்ன்மெண்டுக்குச் சம்பந்தப்பட்ட ஆக்ட் 81-வது பிரிவைச் சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவில் கண்டிருக்கும் நிபந்தனைகளை அனுசரித்து, சென்னைச் சட்டநிருபண சபையாரால் செய்யப்புட்ட அடியிற்கண்ட ஆக்டானது - 1922-ம் வருஷம் மார்ச்மீ 5உ கவர்னரவர்களாலும் 1922-ம் வருஷம் மாசச்மீ 22உ கவர்னர் ஜெனரலவர்களாலும் அங்கீகரிக்கப்பட்டு, இதனால் யாவர்க்கும் தெரியும்படி பிரசித்தஞ் செய்யப்படுகிறது:—

## ACT No. IV OF 1922.
## 1922-ம் வருஷத்து 4-வது ஆக்ட்.

---

## AN ACT TO AMEND THE MADRAS REVENUE RECOVERY ACT II OF 1864.
## (ஸர்க்கார்) தீர்வை வசூலைக்குறித்த சென்னபட்டணம் 1864-ம் வருஷத்து 2-வது ஆக்டைத் திருத்துவதற்கான ஆக்ட்.

---

சென்னபட்டணம் 1864-ம் வருஷத்து 2-வது ஆக்ட்.

பீடிகை.

நிலத்தீர்வை வசூல் விஷயமாக ஏற்பட்டிருக்கும் அவசரமான சந்தர்ப்பத்தை உத்தேசித்து (ஸர்க்கார்) தீர்வை வசூலைக்குறித்த சென்னபட்டணம் 1864-ம் வருஷத்து ஆக்டைத் திருத்துவது யுக்தமாயிருக்கிறபடியால், இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால் :—

சுருக்கமான பெயர்.

1. இந்த ஆக்டை, (ஸர்க்கார்) தீர்வை வசூலைக்குறித்த (சிறிதுகாலத்துக்குத் திருத்துவதற்கான) 1922-ம் வருஷத்திய சென்னபட்டணத்து ஆக்டென்று சொல்லலாம்; மேலும், இது - 1923-ம் வருஷம் ஜூன்மீ 30உ வரையில் செலாவணியாய்க்கொண்டிருக்கும்.

அர்த்தம் கூறும் பகுதி.

**அர்த்தம்**.—"பிரதான ஆக்ட்" என்பது - (ஸர்க்கார்) தீர்வை வசூலைக்குறித்த சென்னபட்டணம் 1864-ம் வருஷத்து 2-வது ஆக்டென்று அர்த்தமாகும்.

1864-ம் வருஷத்து 2-வது ஆக்ட்.

அசையும் பொருளை விற்பனை செய்வதற்கான நடவடிக்கைமுறை.

2. பிரதான ஆக்டின் 9-வது, 2?-வது பிரிவுகளில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, பிரதேச கவர்ன்மெண்டார் - போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்டிலும் ஜில்லாவின் ஸர்க்கார் கெஜெட்டிலும் விளம்பரம் பிரசுரித்து அதன்மூலமாய், குறித்த யாதொரு விஸ்தீர்ணத்துக்குள் அசையும்பொருளை ஜப்திசெய்கிற யாதொரு உத்தி

யோகஸ்தருக்கு, அவரால் குறிப்பிடப்படக்கூடிய காலத்திலும் இடத்திலும் ஜப்தி செய்யப்பட்ட சொத்தை விற்பதற்கு அதிகாரம் கொடுக்கலாம்; அந்த உத்தியோகஸ்தர்-ஜப்திசெய்யப்பட்ட சொத்து இன்ன இடத்திலும் இன்ன தேதியிலும் இன்ன மணி நேரத்திலும் விற்கப்படுமென்று கண்டு ஒரு நோடிஸைத் தீர்வை செலுத்தத் தவறிப்போனவர் சாதாரணமாய் வாசஞ்செய்கிற இடத்திலாவது சொத்து ஜப்திசெய்யப்பட்டிருக்கக்கூடிய வளவிலாவது ஓட்டும்படியோ விட்டுவைக்கும்படியோ செய்யவேண்டும்; மேலும், அவர் - சாத்தியமாயிருந்தால் ஜப்திசெய்யப்பட்ட கிராமத்தில் தண்டோரா மூலமாகவும், விற்பனை விஷயத்தைத் தகுந்தபடி பிரசித்தப்படுத்துவதற்கு அவசியமென்று அவருக்குத் தோற்றக்கூடிய வேறே விதமாகவும் உத்தேசிக்கப்பட்ட விற்பனை விஷயத்தை பிரசித்தம் செய்விக்கவேண்டும். அந்தப்படி பிரசித்தம் செய்யப்பட்ட தேதியிலிருந்து மூன்று தினங்கள் கழிந்துபோகிறவரையில் விற்பனை எதுவும் நடக்கக்கூடாது.

*அசையாப்பொருளை விற்பனை செய்வதற்கான நடவடிக்கைமுறை.*

3. பிரதான ஆக்டின் 27-வது பிரிவிலும் 36-வது பிரிவைச் சேர்ந்த (1)-வது, (2)-வது பகுதிகளிலும் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, பிரதேச கவர்ன்மெண்டார் - போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ் கெஜெட்டிலும் ஜில்லாவின் ஸர்க்கார் கெஜெட்டிலும் விளம்பரம் பிரசுரித்து அதன்மூலமாய், ஜப்திசெய்திருப்பதைபபற்றி ஜில்லா கெஜெட்டில் விளம்பரம் பிரசுரிக்கவேண்டுமென்பதைப்பற்றிய நிபந்தனையை, குறித்த எந்த விஸ்தீர்ணத்தின் விஷயத்திலாகிலும் அனுசரிக்காமல் விட்டுவிடலாமென்று கட்டளையிடுவதுமல்லாமல், அசையாப்பொருளை விற்பனைசெய்ய அதிகாரம் கொடுத்திருக்கும் உத்தியோகஸ்தருக்கு, அவரால் நிர்ணயிக்கப்படக்கூடிய காலத்திலும் இடத்திலும் பகிரங்கமாய் ஏலம் போட்டு ஷை சொத்தை விற்பனைசெய்ய அதிகாரமும் கொடுக்கலாம். உத்தேசிக்கப்பட்ட விற்பனை விஷயத்தைக் குறித்து நோடிஸ் ஒன்று தயார்செய்து, அதன் பிரதிகளைத் தாலூகா கச்சேரியிலும் ஷை சொத்து எந்த கிராமத்தில் இருக்கிறதோ அந்த கிராமத்தில் நன்றாய்த் தெரியும்படியான சில இடங்களிலும் ஒட்டவேண்டும். மேலும், அந்த உத்தியோகஸ்தரானவர் - சாத்தியமாயிருந்தால் கிராமத்தில் தண்டோராமூலமாகவும் விற்பனை விஷயத்தைத் தகுந்தபடி பிரசித்தப்படுத்துவதற்கு அவசியமென்று அவருக்குத் தோற்றக்கூடிய வேறே விதமாகவும் உத்தேசிக்கப்பட்ட விற்பனை விஷயத்தைப் பிரசித்தம் செய்விக்கவேண்டும்: ஆனால், ஷை விற்பனையானது - அந்தப்படி பிரசித்தஞ் செய்யப்பட்ட தேதியோ விற்பனை நோடிஸின் பிரதி தாலூகா கச்சேரியில் ஒட்டப்பட்ட தேதியோ இவைகளில் எது பிற்பட்டதாயிருக்கிறதோ அந்தத் தேதியிலிருந்து எழு தினங்களுக்குள்ளாக நடக்கக்கூடாது. 1864-ம்வருஷத்து 2-வது ஆக்ட்.

*பிரதான ஆக்டின் 37-A பிரிவில் திருத்தம்.*

4. பிரதேச கவர்ன்மெண்டார் - போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ் கெஜெட்டிலும் ஜில்லாவின் ஸர்க்கார் கெஜெட்டிலும் விளம்பரம் பிரசுரித்து அதன்மூலமாய், பிரதான ஆக்டின் 37-A பிரிவானது குறித்த யாதொரு விஸ்தீர்ணத்துக்குப் பிரயோகப்படும்போது, அந்தப் பிரிவைச் சேர்ந்த (1), (2) குறிப்பிட்ட உட்பிரிவுகளில் 'ஐந்து' என்னும் வார்த்தைக்கு பர்த்தியாக 'பத்து' என்னும் வார்த்தை அமைததுக்கொள்ளப்பட்டிருந்தால் எப்புடியோ அப்படியே அந்தப் பிரிவை வாசிக்கவேண்டுமென்று கட்டளையிடலாம். 1864-ம்வருஷத்து 2-வது ஆக்ட்.

ஆர். ராமசந்திர ராவ்,
கவர்ன்மெண்ட் ஸெக்ரெடரி,
லா (லெஜிஸ்லெடிவ்) டிபார்ட்மெண்ட்.

(A true translation)

C. N. SARAVANA MUDALIYAR,
*Tamil Translator to Government.*

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.